**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.278/19**
**வழக்கு சாட்சி – அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஞ்சித்குமார் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 06.04.23

**( 2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.))**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பள்ளபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். 15.1.19ம் தேதியன்று இரவு 8மணியளவில் கொடுவிலார்பட்டிக்கு பொருள்கள் வாங்குவதற்காக நானும் எனது அண்ணன் குபேந்திரனும் சென்றோம். பொருள்கள் வாங்கிவிட்டு வரும் போது கொடுவிலார்பட்டி பஞ்சாயத்து போர்டு ஆபிஸ் முன்பாக ஆஜராகி இருக்கும் எதிரி பாண்டி தகாத வார்த்தையால் பேசினார. எனது அண்ணனை கம்பால் அடித்தார்கள். அதில் என் அண்ணனுக்கு மண்டை உடைந்து இரத்தம் வந்தது. நிறைய பேர் என் அண்ணன் குபேந்திரனை தாக்கினார்கள். அதனால் நான் எனது அண்ணன் குபேந்திரனை க.விலக்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு வந்து போலிசார் விசாரித்தார்கள். எனது அண்ணன் குபேந்திரன் சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தார். நான் அதில் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ1 புகாரில் உள்ள சாட்சி கையெப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.